செயற்பொறியாளர், பொபது/நீஆது., கீழ்வைகை வடிநில கோட்டம், பரமக்குடி
அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : பொறி.சீ.வெங்கிடகிருஷ்ணன், பி.இ.,
செயற்பொறியாளர், பொபது/நீஆது.,

செயல்முறைக் கடித எண்: 756/ இ2/ 2020/ நாள்: 02.11.2020.

பொருள்: பணியமைப்பு - நியமனம்- (நேரடி) தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IVல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் வழங்க ஒதுக்கீடு ஆணை வழங்கியது - இளநிலை உதவியாளர் பதவியில் பணியினை பணிவரன் முறை செய்ய ஆணை வழங்குவது - தொடர்பாக.

பார்வை
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்: 2496/ PSD-I/2020/ நாள்: 29.05.2020.
2. முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செ.மு.ஆ.எண். எஸ். 3(3)/ 35935/ 2020/நாள்: 17.09.2020.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: 756/இ2/2020/ நாள்:22.09.2020.

❁❁❁❁

**ஆணைகள்:**

பார்வை (1)ல் காணும் செயலாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IVல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை(2)ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கீழ்கண்ட இளநிலை உதவியாளர் இக்கோட்ட அலுவலகத்திற்கு பணி நியமன ஆணை வழங்கி ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை(3)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, இளநிலை உதவியாளராக மறுபணியமர்வு ஆணை வழங்கப்பட்டு 22.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | தேர்வாணைய வ.எண் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு.சி.முகமது சாலியா | 71 | 22.09.2020 முற்பகல் | 22.09.2020 முற்பகல் |

(த.பி.பா)

Scanned by TapScanner

இவரது பணியினை தமிழ்நாடு அரசுப்பணியாளர் பணி விதி பாகம்-2 பொது விதிகள் விதி எண்-23(1)ன்படி தனியர் பணியேற்பு செய்த நாள் முதல் தேர்வாணைய கடிதம் பத்தி (5)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி W.P.தொகுப்பு நான்கு 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுக்கான தேர்வு குறித்து சென்னை உயர்நீதி மன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்புகள் நிபந்தனைக்குட்பட்டு பணியில் சேர்ந்த நாளான 22.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் இவர் பணியில் சேர்ந்த நாள் 22.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு காலம் தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுவார் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட இளநிலை உதவியாளரின் பணிவரன்முறை தொடர்பாக தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திலிருந்தோ, முதன்மை தலைமைப்பொறியாளர்,நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொபது., சென்னை அவர்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்பட்டால் இப்பணிவரன்முறை ஆணை உடனடியாக ரத்து செய்யப்படும் எனவும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

s/- 2/11/2020

செயற்பொறியாளர், பொபது/நீஆது.,
கீழ்வைகை வடிநில கோட்டம், பரமக்குடி.

பெறுநர்
திரு.சி.முகமது சாலியா,
இளநிலை உதவியாளர்,
கீழ்வைகை வடிநில கோட்டம்,
பரமக்குடி.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு.

உபரிநகல்: கோப்பிற்கு.

Scanned by TapScanner